Judicial Form No.53
(See Rule 43)
DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.34/2023**

**2024-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18- ம் நாள் வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 08 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 08 | தொழில் | - | கூலி வேலை |
| பெயர் | - | சிவராமன் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | ராவுத்தர் | சமயம் | - | |
| கிராமம் | - | சங்கிலிரோடு | வயது | - | 52 |
| சாதி | - | | | | |

**18.10.2024**

**(எதிரி ஆஜர் )**

**முதல் விசாரணை:**

1. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 24.05.2023-ம் தேதி நான் எனது வீட்டிற்கு சென்று கொண்டிருக்கும் போது ஆஜர் எதிரி சுப்பிரமணி என்பவரை அவரது வீட்டின் அருகே வைத்து கத்தியால் குத்தியதாக கேள்விப்பட்டேன். நான் சுப்பிரமணியை பார்ப்பதற்காக அவரது வீட்டிற்கு சென்ற போது அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்று விட்டதாக சொன்னார்கள். நான் உடனே பன்னிமேடு எஸ்டேட் மருத்துவமனைக்கு சென்று அவரை பார்த்தேன். நான் சுப்பிரமணியிடம் என்ன நடந்தது என்று விசாரித்தபோது ஆஜர் எதிரி மது அருந்திவிட்டு அசிங்கமாக பேசி கத்தியால் குத்தியதாக தெரிவித்தார். போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1 சுப்பிரமணியன் எனக்கு என்ன வேண்டும் என்றால் எனக்கு உடன்பிறந்த சகோதரர் ஆவார். எதிரிக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தமல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.